# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று தஞ்சையில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **10.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | தஞ்சாவூர் (பொதுக்கூட்டம்) | திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை,பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் |
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

குன்னூர் சட்டமன்றத் தொகுதியில்

# கே.எம்.ராஜு தீவிர வாக்கு சேகரித்தார்!

## அரசு கொறடா கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

குன்னூர், ஏப் 10 - குன்னூர் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பாற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் கே.எம்.ராஜு மேலூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கழக அரசின் சாதனைகளையும், தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள அறிவிப்புகளை பட்டியலிட்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தர்.

உடன் தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்ட அவை தலைவர் போஜன், மேலூர் ஒன்றிய செயலாளர் லாரன்ஸ், CPI பெள்ளிஉட்பட கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தேப்பெருமாநல்லூர் ஊராட்சியில் கழக வேட்பாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளனர்.



விராலிமலை சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் விராலிமலை கிழக்கு ஒன்றிய புதுப்பட்டியில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் விராலிமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மு.பி.சத்தியசீலன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.